# பொல்கஹவெல பிரதேச சபை

# குருணாகல் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 15 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 யூன் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஒக்தோபர் 09 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது இவ்வறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொல்கஹவெல பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பரீட்சை மீதியில் வேலைக் கடன்பட்டோராக ரூபா 27,906,616 தொகையான வரவு மீதியும் செலவு மீதியும் காண்பிக்கப்பட்டமையினால் ஆண்டிற்குரிய கடன்பட்டோர் மீதி உள்ளபடியாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூலதன உதவி மற்றும் மூலதனச் செலவினங்கள் உரிய வருமானத் தலைப்பிலும் செலவின விடயத்தின் கீழ் கணக்கு வைக்கப்படாமல் வைப்புக் கணக்கின் மூலம் பதியப்பட்ட காரணத்தினால் ரூபா 52,285,095 தொகையான மூலதனப் பெறுவனவுகள் மற்றும் செலவினங்கள் நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

(இ) மூலதன செலவினமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 17,393,876 தொகையில் மூலதனச் சொத்துக்களின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பின் கீழ் கணக்கு வைக்கப்பட வேண்டிய ரூபா 1,426,285 தொகை உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிதிக்கூற்றுக்களில் ரூபா 25,562,523 தொகையான வேலைக் கடன்கொடுத்தோர் மீதி காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் பெறுமதியும் ஆண்டின் மூலதனச் செலவினமாகக் கணக்கு வைக்கப்படாதிருந்ததுடன் அத்தொகை கடன்பட்டோரின் கீழும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ஆண்டிற்குரிய சம்பள மீளளிப்பு ரூபா 28,227,887 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 29,470,376 ஆகக் காண்பிக்கப்பட்டமையினால் ஆண்டிற்குரிய சம்பள மீளளிப்பு ரூபா 1,242,489 தொகை அதிகரித்துக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே சம்பள மீளளிப்பாக ரூபா 111,500 தொகை பெறவேண்டியதாகக் காணப்பட்ட போதிலும் அது கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஊ) முத்திரைக் கட்டண வருமானமாக நிதிக்கூற்றுக்களுக்கு ரூபா 680,324 தொகை கொண்டுவரப்பட்ட போதிலும் உள்ளபடியான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 9,788,059 ஆனமையால் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 9,107,735 தொகை குறைத்துக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2010 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 5,000,000 தொகை மற்றும் 2012 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 9,788,059 தொகையும் ஆக ரூபா 14,788,059 தொகையான நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் பெறவேண்டியதாகக் காணப்பட்ட போதிலும் அத் தொகை வருமானக் கடன்பட்டோரின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 1,439,735 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான தொகை ரூபா 2,273,080 ஆனமையால் நீதிமன்றத் தண்டப் பண வருமானம் ரூபா 833,345 தொகை குறைத்துக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே கிடைக்க வேண்டிய ரூபா 923,689 தொகையான நீதிமன்றத் தண்டப்பண வருமானம், வருமானக் கடன்பட்டோரின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கொங்கிரீட் சிறுகற்கள் செயற்திட்டத்திற்காக ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 2,590,624 தொகையான வருமானம் நடைமுறை வருமானத் தலைப்பில் கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 2,493,499 தொகையான செலவினம் 309 இன் மூலதனச் செலவினத்தின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே கொங்கிரீட் சிறுகற்கள் செயற்திட்டத்தின் இருப்புப் பதிவேட்டின் பிரகாரம் காணப்பட்ட ரூபா 855,667 தொகையான கையிலுள்ள இருப்பு மீதி நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 31,507,320 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

## 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 8,367,024 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,938,311 ரூபா ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ஊழியர் கடன் மீதியான ரூபா 8,696,633 தொகையில் சேவையைக் கைவிட்டுச் சென்ற 10 ஊழியர்களுக்குரிய ரூபா 218,729 தொகை அறவீடு செய்து கொள்ள முடியாத மீதியாகக் காணப்பட்டது. அவ்வாறே 5 கணக்கு விடயங்களின் கீழ் ரூபா 172,241 தொகையான மீதி பல வருட காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன் அவை எழுந்த முறைகள் இனங்காணப்பட்டு தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆண்டின் கணக்கைத் தயாரிக்கும் போது தளபாடமும் பொருத்திகளும் கணக்கில் ரூபா 1,301,680 தொகையான மீதி மெய்மையாய்வுச் சபை தீர்மானத்தின் பிரகாரம் நாட்குறிப்புப் பதிவின் மூலம் உரிய கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் அந்த அகற்றுதல்களுக்குரிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிக்கூற்று தயாரிக்கும் போது முன்னைய ஆண்டுகளிலிருந்து காணப்படுகின்ற கணக்கு மீதி எழுந்த முறைகளை கண்டறியாமலும் அங்கீகாரமின்றியும் நாட்குறிப்புப் பதிவுகளின் மூலம் திரண்ட நிதியத்திற்கு 10 சந்தர்ப்பங்களில் ரூபா 46,730,587 தொகை செலவு வைக்கப்பட்டும் 13 சந்தர்ப்பங்களில் ரூபா 22,364,028 தொகை செலவு வைக்கப்பட்டும் பதிவழிப்பட்டிருந்தது.

(ஈ) முற்பண மீதியினுள் அவசர விபத்துகளுக்கான நட்டஈடாகச் செலுத்தப்பட்ட ரூபா 85,882 தொகை உள்ளூராட்சித் திணைக்களத்திலிருந்து மீளளிப்புச் செய்யப்பட வேண்டி இருந்த போதிலும் இது வரையிலும் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வங்கிக் கணக்குகள்

(அ) பொது நடைமுறை வங்கிக் கணக்கில் 2011 திசெம்பர் மாதத்திற்குரிய இனங்காணப்படாத கொடுக்கல் வாங்கல் தொடர்பாக நாட்குறிப்புப் பதிவின் மூலம் பொதுக் காசுக் கணக்கு ரூபா 3,150,144 தொகை வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியம் ரூபா 3,150,144 தொகை இனங்காணப்படாமல் செலவு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அக்கணக்கிற்குரிய மேலதிகபற்று மீதி எழுந்திருந்ததுடன் ஆண்டின் இறுதியில் வங்கிக்கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் அந்த மேலதிகப்பற்று மீதி ரூபா 1,075,666 ஆக இருந்தது. பற்றுச் சீட்டு இன்றிய பெறுவனவாக இனங்காணப்படாத ரூபா 91,900 தொகையும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வேலை நடைமுறை வங்கிக் கணக்கில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் பொதுக் கணக்கில் சேகரிகத்தலின் கீழ் ரூபா 613,583 தொகையும், பெறவேண்டிய பணமாக ரூபா 195,000 தொகையும், வேலைக் கணக்கில் அதிகரித்த செலவான ரூபா 2,611,982 தொகையும் இனங்காணப்பட்டு தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஊழியர் கடன் நடைமுறை வங்கிக் கணக்கில் ஆண்டின் இறுதியில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் பொது வங்கிக் கணக்கில் கூறிப்பிடப்பட்டிருந்த கணக்கில் செலவில் வைக்கப்படாத காசோலையாக ரூபா 12,161 தொகையும் பொதுக் கணக்கில் செலவு வைக்கப்பட்ட தொகையான 2012 மார்ச் தொடக்கம் திசெம்பர் வரையான காலத்திற்குரிய ரூபா 27,709 தொகையும் தீர்க்கப்படாது காணப்பட்டது.

## 2.4 வருமான நிருவாகம்

### 2.4.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 3,956 | 4,219 | 5,202 |
| (ii) | வாடகை | 3,653 | 5,278 | 2,089 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,631 | 1,564 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 66,560 | 41,052 | 1,563 |

### 2.4.2 ஆதனவரி

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஆதனவரி மீதி ரூபா 5,202,721 தொகையாக இருந்ததுடன் இந்த நிலுவை வரியினை அறவீடு செய்தல் தொடர்பாக

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவையின் விதி இல. 32 தொடக்கம் 42 வரையான விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இறுதி அறிவித்தல் விநியோகித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 28 சந்தர்ப்பங்களில் நீண்ட கால நிலுவை வரிகளின் பெறுமதி 147,034 ஆக இருந்தது.

**2.4.3 கடை வாடகை**

(அ) நீண்ட கால வாடகைக்கு வழங்கலின் கீழ் 8 சந்தர்ப்பங்களில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 65,124 தொகையான நிலுவை வாடகை காணப்பட்டதுடன் 12 கடைகளில் நீண்ட காலமாக ரூபா 145,527 தொகையான நிலுவை காணப்பட்டதுடன் மாதாந்த பற்றுச்சீட்டு வழங்கல்களும் நிறுதுத்தப்பட்டிருந்தன. எனினும் இந்தக் கடைகள், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடாத்தப்பட்டுக் கொண்டிருந்ததுடன் அவ்வாறு பற்றுச் சீட்டுக்கள் கைவிடப்பட்டமையின் காரணமாக சட்ட ரீதியான நிலுவைப் பணத்தை அறவீடு செய்ய முடியாமைக்கான காரணம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் போது உடைத்து அகற்றப்பட்ட 14 கடைகளிலிருந்து ரூபா 15,693 தொகையான நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டி இருந்ததுடன் நகரத்தில் காணப்பட்ட 3 பாதணிக் கடைகள் அந்தக் காலத்தின் போது அகற்றப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறு நிலுவைத் தொகையாகக் காணப்பட்ட ரூபா 69,780 தொகையினை அறவீடு செய்வதற்கு இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கொடவெல வாராந்த சந்தையின் 8 நடைபாதைக் கடைகளில் 4 கடைகள் நீண்ட காலமாக ரூபா 46,655 தொகையான நிலுவை வாடகையை அறவிட்டிருக்கவில்லை.

(இ) பொத்துஹெர உப அலுவலகத்திற்குரிய பொதுச் சந்தையின் 13 கடைகளில் 12 கடைகள் 5 வருடங்கள் அளவிலான காலத்திலிருந்து மூடப்பட்டிருந்ததுடன் அந்தக் கடைகளிலிருந்து ரூபா 9,960 தொகை வாடகை அறவிடுவதற்கிருந்தது. இந்தக் கடைகள் நவீன மயப்படுத்த வேண்டிய நிலைமையில் காணப்பட்டதுடன் சபை அவ்வாறான செயல் நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்காமையினால் அந்தக் கடைகளை வாடகைக்கு விடமுடியாதிருந்தது. பொத்துஹெர உப அலுவலகத்திற்குரிய 5 உஹுமிய சந்தைக் கடைகளில் நீண்ட காலமாகக் காணப்படுகின்ற ரூபா 181,218 தொகையான நிலுவை வாடகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.4.4 வாடகை

(அ) வருடாந்த வாடகைக்கு வழங்கலின் கீழ் 2007 தொடக்கம் 2011 ஆம் காலப்பகுதிக்காக 23 சந்தர்ப்பங்களில் ரூபா 1,891,973 தொகையான நிலுவை வாடகை காணப்பட்டதுடன் அதில் சில நிலுவைகளுக்காக வழக்குத் தொடரப்பட்டிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் வழக்குப் பதிவேடு மற்றும் கோவைகள் நாளதுவரையாக்கப்படாமையின் காரணமாக அந்த வழக்குகளில் செயல்முன்னேற்றத்தை இனங்காண முடியாதிருந்தது.

(ஆ) சபைக்கு சொந்தமான சைக்கிள் பாதுகாக்கும் இடம் ஒன்று 2012 இல் ஆண்டிற்கு ரூபா 109,395 தொகையில் வாடகைக்கு விடப்பட்டிருந்ததுடன் வாடகையாளரினால் 2012 சனவரி தொடக்கம் மே வரையான 5 மாத காலம் நடாத்திற் செல்லப்பட்ட செயற்பாடுகள் அகற்றப்பட்டிருந்ததுடன் வாடகையாளரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 56,250 தொகையில் பிணைப்பணமான ரூபா 43,758 தொகை ஈடுசெய்யப்பட்டதன் பின் மேலும் ரூபா 12,492 தொகையான நிலுவை காணப்பட்டதுடன் 2012 ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் இந்த பாதுகாத்தல் நிலையம் சபையினால் பராமரிக்கப்படாது கைவிடப்பட்டிருந்தது.

(இ) கொடவெல வாராந்த சந்தை சிற்றுண்டிச்சாலை தொடர்பாக கடைசியாக 2008 சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2008 திசெம்பர் 31 வரையான காலத்தில் மாதாந்த வாடகை ரூபா 1,250 தொகையில் உடன்படிக்கை காணப்பட்டதுடன் இக்கட்டிடத்திற்காக ரூபா 261,817 தொகை திருத்தச் செலவினமாக செய்யப்பட்டிருந்தது. 2009 ஆம் ஆண்டின் ஆரம்பம் தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. முறையான உடன்படிக்கை மற்றும் வாடகை செலுத்தாமல் வாடகையாளர் கடையை நடாத்திச் செல்வது தொடர்பாக 2008 ஆம் ஆண்டில் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுத்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்புக் கிடைத்திருக்கவில்லை.

(ஈ) பஸ் நிலைய சிற்றுண்டிச்சாலை வாடகையாக 2007 தொடக்கம் 2012 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா 499,558 தொகையான நிலுவைப்பணம் அறவிடப்பட வேண்டி இருந்த போதிலும் நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4.5 விற்பனை வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்**

பிரதேச சபையினால் விற்பனை வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திர பற்றுச் சீட்டிடல்கள் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவையின் விதி இல. 59 மற்றும் 67 வரையுள்ளதன் பிரகாரம் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.4.6 தொலைபேசி சமிக்ஞை கோபுரங்களுக்கான செயன்முறைக் கட்டணம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் 16 தொலைபேசி பரிவர்த்தனை கோபுரங்கள் நிறுவப்பட்டிருந்தமை இனங்காணப்பட்டு 2010 தொடக்கம் 2012 வரை 2 கோபுரங்களுக்காக ரூபா 400,000 தெகையான செயன்முறைக் கட்டணம் அறவிடப்பட்டிருந்ததுடன் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அல்லது விற்பனை வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4.7 வாகனம் நிறுத்தி வைத்தற் கட்டணம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்குரிய உப விதிகள் காணப்படாதிருந்ததுடன் முச்சக்கர வண்டிகள் நிறுத்தி வைப்பதற்குரிய வருடாந்த அல்லது காலரீதியான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற முச்சக்கர வண்டிகளைப் பதிவு வெய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.4.8 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டில் கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம்/ முத்திரைக் கட்டணம் என்பன இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவையின் விதி இல 218 இன் பிரகாரம் சகல காணிகளும் கட்டிடங்களும் வருடத்திற்கொரு தடவை பரிசீலனை செய்யப்பட வேண்டி இருந்த போதிலும் சபையினால் அவ்வாறு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.6 மனித வள முகாமைத்துவம்

சபைக்குரிய அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 129 ஆகவும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 100 ஆகவும் காணப்பட்டதுடன் வெற்றிடம் 29 ஆகவும் மிகை 01 ஆகவும் காணப்பட்டதுடன் அதனுள் செயலாளர் பதவி மற்றும் 4 நூலகர் பதவிகளில் 01 பதவி வேலைகளைக் கவனிக்கும் அடிப்படையில் காணப்பட்டது. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதியின் போது அமைய மற்றும் நாட்சம்பள அடிப்படையில் 62 பேர் சேர்க்கப்பட்டு சபை நிதியத்திலிருந்து சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.7 சபைக்கு எதிராக அல்லது சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

கடை வாடகை சம்பந்தமாக காணப்பட்ட நிலுவைகளை அறவீடு செய்வதற்கு சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை கடை வாடகைப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்காகப் பேணப்பட்ட கோவைகள் அல்லது வழக்குப் பதிவேடுகள் நாளதுவரையாக சபை பேணி இருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது 3 வழக்குகளில் சட்டக் கட்டணமாக ரூபா 62,500 தொகை செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே ரூபா 596,957 தொகையான நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கான 2007 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் தொடுக்கப்பட்ட 5 வழக்குகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இணக்கப்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 2.8 ஒப்பந்த நிர்வாகம்

மொத்தக் கிரயம் ரூபா 597,879 தொகையின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட மாட்டு அறுவைக்கூட நிர்மாணத்தின் போது பொதுச் சகாதாரப் பரிசோதகரின் ஆலோசனை பெறப்பட்டிருக்கவில்லை. மாடு அறுவைக் கூடமாக நடாத்திச் செல்வதற்காக மேலும் நிறைவு வேண்டிய செயற்பாடுகள் காணப்படுகின்றமை சுகாதார வைத்திய அதிகாரியின் 2011 யூலை 21 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும்

அந்தச் செயற்பாடுகளை பூர்த்தி செய்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மாடு அறுவைக்கூடம் உரிய செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.9 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2 வருமான விடயங்களின் கீழ் ரூபா 31,935,000 வருமானத்தை உழைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் அதில் 15 சதவீதமான ரூபா 4,894,000 தொகை மாத்திரமே உழைக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 7,811,922 ஆக இருந்தது. அவ்வாறே சபைக்குரிய மாதாந்த தவணைக் கட்டணமாக ரூபா 15,610 படி அந்நிதியத்தினால் அறவிடப்பட்டிருந்த போதிலும் அந்த அறவிடல்கள் சபையின் எந்த ஊழியர்களுக்குரியது என சபை அறிவித்திருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான பொதுச் சந்தைக் கடைகளுக்கான தனியான நீர்மானி பொருத்தப்படாது இருந்ததுடன் பொதுச் சந்தையில் பொது நீர் வழங்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 141,520 தொகையை சபை செலவிட்டிருந்தது. மேலும் பொதுச் சந்தையில் பாதுகாப்பு கூடாரத்தின் மின் கட்டணத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 37,744 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அவ்வாறான தொகை பாதுகாப்புக் கூடாரத்திற்காக செலவிட்டமைக்கான காரணங்களும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.10 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற குப்பைகளை அகற்றுவதற்காக ரூபா 9,709,224 தொகை செலவிடப்பட்டு கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் போது கூட்டுப்பசளை விற்பனை மற்றும் கழிவுப் பொருள் விற்பனையில் ரூபா 50,788 தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. அதற்காக மீளாய்வாண்டிற்குரிய சம்பளச் செலவினம் ரூபா 1,275,761 ஆக இருந்தது.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டடப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிருவாகம்